දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

இளங்கலைமாணி முதலாம் ஆண்டுப் பரீட்சை (வெளிவாரி புதியபாடத்திட்டம்) **(ஆகஸட் 2018)**

# ECNE 102 ஓப்பீட்டுப் பொருளாதார அபிவிருத்தி

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக
இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்.
ஒவ்வொரு வினாவிற்கும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன
ஒதுக்கப்பட்டுள்ள நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

## பகுதி I - ஐக்கிய இராச்சியம்

1. (i) 'நவீனத்துவம்' என்பதனால் கருதப்படுவது யாது? (04 புள்ளிகள்)
   (ii) நவினத்துவத்தின் பிரதான அம்சங்கள் யாவை? (06 புள்ளிகள்)
   (iii) நவீன பொருளாதார வளர்ச்சியின்மீது நவீனத்துவத்தின் பங்கு, அதன் முக்கியத்துவம் என்பன குறித்து ஆராய்க. (10 புள்ளிகள்)

2. (i) நிலஅடைப்புக்கள் என்பதனால் கருதப்படுவது யாது? (06 புள்ளிகள்)
   (ii) பெரிய பிரித்தானியாவில் , நில அடைப்பு இயக்கங்களின் சமூக, பொருளாதார தாக்க விளைவுகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

3. (i) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, பெரிய பிரித்தானியாவில் ஏற்பட்டு வந்த கைத்தொழில் முன்னேற்றத்தினை விபரிப்பதற்குக் 'கைத்தொழில் புரட்சி' என்ற பதம் எந்தளவுக்குப் பொருத்தமானது? விளக்குக. (10 புள்ளிகள்)
   (ii) "பெரிய பிரித்தானியாவில், பருத்தி நெசவுக் கைத்தொழிலைப் புரட்சிகரமாக மாற்றி அமைப்பதற்கு 'நான்கு பெரிய கண்டுபிடிப்புக்கள்' பிரதானமாகப் பொறுப்பாக இருந்துள்ளன". ஆராய்க. (10 புள்ளிகள்)

4. பத்தொன்பதாம் நூற்றாண்டில், பெரிய பிரித்தானியாவில், புகையிரதப் போக்குவரத்தின் வளர்ச்சியின் முன் இணைப்புக்களையும் மற்றும் பின் இணைப்புக்களையும் விபரிக்குக. (20 புள்ளிகள்)

5. பெரிய பிரித்தானியா தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:-
   (i) 1815 ஆம் ஆண்டின் தானியச் சட்டம்
   (ii) ஆவணர் இயக்கம்
   (iii) நோவோர்க் முறை
   ((iv) 1824 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தொழிற் சங்கங்கள்
   (v) 'கட்புலனாகாத கை' என்ற எண்ணக்கரு (04 x 05=20 புள்ளிகள் )

## பகுதி II - இலங்கை

6. 1884 முதல் 1896 வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் தேயிலைக் கைத்தொழிலின் பிரதான போக்குக்களைச் சுருக்கமாக விளக்குவதுடன், இக்காலப்பகுதியில், தேயிலைக் கைத்தொழிலின் துரித விரிவாக்கத்தின்மீது செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகளையும் குறிப்பிடுக. (20 புள்ளிகள்)

7. இலங்கையின் கிராமிய விவசாயத் துறையின்மீது, பிரித்தானிய நிலக் கொள்கையின் தாக்க விளைவுகளை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க. (20 புள்ளிகள்)

8. சுதந்திரத்திற்கு முற்பட்ட இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்புக் குறித்து ஆராய்வதில் 'இரட்டைப் பொருளாதாரம்' என்ற பதம் எந்தளவுக்குப் பொருத்தமானது? விளக்குக. (20 புள்ளிகள்)

9. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில், இலங்கையில், கிராமிய விவசாயத்துறையின் சார்புரீதியான தேக்க நிலைமைக்கு நீர் எக்காரணிகள் பொறுப்பானவை எனக் கூறுவீர்? (20 புள்ளிகள்)

10. இலங்கை தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:-
    (i) தரிசு நிலச் சட்டம்
    (ii) கோல்புறூக் ஆணைக் குழுவின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள்
    (iii) 1990 – 1934 காலப் பகுதியில் இறப்பர் கைத்தொழில்
    (iv) 1802 – 1833 காலப்பகுதியில் கறுவா வர்த்தகம்
    (v) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தொழிற் சங்க இயக்கங்கள் (04 x 05=20 புள்ளிகள் )

---